சமீபத்தில் நடந்து முடிந்த உபாகர்மா, ஆவணி அவிட்டத்தன்று நாம் எல்லோரும் ஹோமத்தை தொடர்ந்து வரக்கூடிய வேதாரம்பத்தை குரு முகமாக செய்திருப்போம். அதுபோது வேதாரம்பத்தின் அங்கமாக செய்த சங்கல்பத்தில் ‘அத்யயன, அத்யாபன, யஜன, யாஜன, தான, பிரதிக்ரஹானாம் ஷன்னாம் யோக்யதா ஸித்யர்த்தம்....’ என்று ஒரு வாக்யம் வருகின்றதை நாம் கவணித்திருப்போம். இந்த ஷன்னாம் என்கின்ற ஆறு கர்மாக்களை பற்றி தற்போது இங்கு சுறுக்கமாக பார்ப்போமா. உபநயன சம்ஸ்காரம் ஆனவர்கள் எல்லோருக்கும் இந்த ஆறு கர்மாக்களை அனுஷ்டிப்பதற்கு அதிகாரம் உள்ளது. அதை நாம் முதலில் புரிந்துக்கொள்ள வேண்டும். அதற்காகத்தான் பிராஹ்மணர்களுக்கு ’ஷட் கர்ம நிரதர்' என்று ஒரு உசத்தியான பட்ட பெயரும் உண்டு.

அந்த ஆறு விதமான கர்மாக்களை பற்றிய விவரங்கள்:

1. அத்யயனம்: வேதம் பயிலுவது, அதாவது குருமுகமாக வேதம் கற்றுக்கொள்ளுவது

2. அத்யாபனம்: யோக்யதையுள்ள சிஷ்யர்களுக்கு வேதத்தை விதிப்படி கற்றுத்தருவது.

3. யஜனம்: யக்ஞ யாகாதிகளை தான் ஸ்வயமாக அனுஷ்டிப்பது

4. யாஜனம்: யக்ஞ யாகாதிகளை பிறருக்கு செய்விப்பது

5. தானம் : வேள்வியில் தான் பிறருக்கு தக்ஷிணை தருவது

6. ப்ரதிக்ரஹம் : தக்ஷிணை தந்து வேள்விகள் நடத்தவும் மற்றும் யோக க்ஷேமத்திற்கும் நமக்கு திரவ்யம் தேவை அல்லவா. இம்மாதிரியான விஷயங்களுக்கு செலவழிப்பதற்காக வைதிக கார்யங்களை பிறருக்கு நடத்திக்கொடுத்து தக்ஷிணை வாங்கிக் கொள்ளுவது.

இந்த ஆறும் தான் பிராஹ்மணனுக்கு விதிக்கப்பட்டுள்ள ஷட்கர்மாக்கள் எனச் சொல்லலாம்.

மேலும் இந்த ஆறைத்தவிர மேலும் ஒரு வேறு தினசான ஆறு கர்மாக்களையும் நாம் தர்ம சாஸ்த்ரத்தில் காணுகின்றோம். ப்ராஹ்மணன் நித்யம் அனுஷ்டிக்க வேண்டிய கர்மாக்களை இது பட்டியல் இடுகின்றது. அதை பற்றியும் இந்த சந்தர்பத்தில் சற்று சுறுக்கமாக பார்த்து விடுவோம்:

ஸந்த்யா-ஸ்நானம் ஜபோ ஹோமம் தேவதானாம் ச பூஜனம்|

ஆதித்யம் வைச்வதேவம் ச ஷட்கர்மாணி தினே தினே|

1. ஸந்தியாவந்தனம் : பிராத: ஸந்தியாவந்தனம், மாத்யாஹ்நிகம், சாய ஸந்தியாவந்தனம் ஆகிய த்ரிகால ஸந்தியாவந்தன அனுஷ்டானம்.

2. ஜபம் : வேறு ஏதாவது மந்த்ரோபதேசம் ஆகி இருந்தாலோ அல்லது அவரவர்களின் இஷ்ட தேவதை குல தேவதை ஆகியவர்களின் மேல் மந்த்ரங்களை ஜபிப்பது

3. ஹோமம் : ஔபாஸனம், அக்னிஹோத்ரம் போன்றவைகள்

4. தேவதா பூஜனம்: நிவேதனங்கள் சஹிதமாக மடி ஆச்சாரத்துடன் யதாவிதியாக பஞ்சாயதன பூஜை மாதிரி நித்ய பூஜைகளை செய்வது

5. ஆதித்யம்: அதிதிகளை விருந்தோம்பலுடன் உபசரிப்பது.

6. வைஸ்வதேவம் : வைஸ்வதேவம் என்பது க்ருஹஸ்தர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள ஒரு நித்ய கர்மா ஆகும். மாத்யாஹ்னத்திற்கு பிறகு செய்ய வேண்டியதாகும் இது. சகல ஜந்துக்களின் ஸ்ரேயஸ்ஸை உத்தேசித்து செய்யப்படும் ஒரு விசேஷமான நித்ய கர்மா இது.